**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 126/2017**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.10.2025 | | |
| பெயர்: | தில்ஷாத் பேகம் (PW–1 Cross con) | கணவர் பெயர்: | ஷேக் அலாவுதீன் |
| கிராமம்: | துளசேந்திரபுரம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 44/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 25.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 16.12)**

1. 2ம் வாதி அன்சர் பேகம் ஏற்கனவே சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணி புரிந்தார் என்றால் சரிதான். தற்போது சீர்காழி நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருகிறார். 2ம் வாதி சாட்சியம் அளிக்க வருவாரா என்றால் வருவார். தாவா 'அ' அட்டவணை சொத்திற்கு வடக்கில் அன்சர் பேகம் சொத்து உள்ளது. தாவா 'ஆ' அட்டவணை சொத்து விபரத்தில் தில்ஷாத் பேகம் சொத்திற்கு வடக்கு என்றுதான் குறிப்பிட்டிருக்க வேண்டும், ஆனால் தவறுதலாக ஜெய்புனிசா சொத்திற்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. தாவா 'ஆ' அட்டவணை சொத்தில் தில்ஷாத் பேகம் சொத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. யார் யார் சொத்து எந்தெந்த பக்கம் உள்ளது என்றால் தாவா சொத்தின் முதலில் வடக்கிலிருந்து தெற்காக முதலில் ஜெய்புனிசா பேகம், அடுத்ததாக அன்சர் பேகம், அடுத்ததாக என் சொத்து என்ற வரிசையில் உள்ளது. ஜெய்புனிசா பேகம்

என்பது எனது 2வது சகோதரி ஆவார்.

3. தாவா 'ஆ' அட்டவணை சொத்திற்கு வடக்கில் தில்ஷாத் பேகம் இருப்பதாகவும், தெற்கில் ஜெய்புனிசா பேகம் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 'அ' அட்டவணை மற்றும் 'ஆ' அட்டவணை சொத்துக்களை பொறுத்து நான்கெல்லை தவறாக உள்ளதால் எந்த சொத்து என் அடையாளம் காண இயலாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. ஜெய்புனிசா பேகம் சொத்திற்கு நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சர்வே எண் 418/1ல் மொத்தம் 2 ஏக்கர் 72 செண்ட் என்றால் பத்திரத்தில் என்ன உள்ளதோ அதுதான் சரி. தலா 85 செண்ட் வீதம் எனக்கும் மற்ற இரு சகோதரிகளுக்கும் ஒதுக்கப்பட்டது 2 ஏக்கர் 55 செண்ட் போக மீதமுள்ள 17 செண்ட் எனது சகோதரர் முகமது சிராஜூதீனிடம் உள்ளது. அந்த 17 செண்ட் அவருக்கு அப்பா இடம் என்பதால் கிடைத்தது. அதற்கு அப்பா ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்.

5. எப்போது ஆவணம் எழுதப்பட்டதென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். எனது சகோதரருக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஜெய்புனிசா பேகம் இடத்திற்கு வடக்கில் உள்ளது. பிரதிவாதி நீதிமன்ற பறவை என்று சொல்வது தவறு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பணம் பறிக்கும் நோக்கத்துடன் வழக்கு தாக்கல் செய்பவர் கிடையாது என்றால் சரியல்ல.

6. எங்களது செட்டில்மெண்ட் ஆவணமே செல்லாது என்பதால் எங்களது பட்டாவும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஏதேனும் பயிர் செய்துள்ளோமா என்றால் பெற்றோர் செய்தனர் தற்போது புஞ்சையாக உள்ளது. நானோ எனது சகோதரிகளோ ஏதும் பயிர் செய்தது கிடையாது. தாவா சொத்துக்கள் எங்களது அனுபவத்தில் தான் உள்ளது என்பதற்கான சிட்டா அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. தாவா சொத்திற்கான இன்சூரன்ஸ் செலுத்தி ரசீது ஏதும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் வங்கி கடன் ஏதும் இல்லை.

7. சர்வே எண் 418/1Aல் கிழக்கில் 418/2B மீனாட்சி என்பவர் சிந்தாமணியிடம் 1975ல் கிரயம் வாங்கிய இடம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களுடைய பத்திரத்தில் நான்கெல்லையில் கிழக்கில் மீனாட்சி இடம் காட்டப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா புல எண்ணிற்கு கிழக்கில் பெருமாள் நாடார் இடம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. சர்வே எண் 418/1Bல் மீனாட்சி என்பவர் 1994ம் வருடம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பெருமாள் நாடார் இடத்திற்கு தெற்கில் எங்களது சொத்து இல்லை என்றால் பெருமாள் நாடார் யாரென்று எனக்கு தெரியாது. அப்துல்லா நஞ்சை இடத்திற்கு வடக்கில் எங்களது இடம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உயிரிழந்தவரை அடக்கம் செய்வது உள்ளது என்றால் சரிதான்.

9. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள சுடுகாடு தாவா சொத்தா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா புல எண்ணின் கிழக்கு புற எல்லைகள் பத்திரத்தில் தவறாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ளபடி பூமியில் நான்கெல்லை இல்லை என்றால் சரியல்ல. எங்களது பத்திரத்தில் நான்கெல்லைகளும் தவறுதலாக உள்ளது என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தை பொறுத்து நில அளவையர் மூலமாக அளந்து எல்லை குறிக்க நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால் நீதிமன்றம் மூலமாக அளந்து எல்லை குறிக்கப்பட்டது. நீதிமன்றம் மூலமாக அளந்து எல்லை குறிக்கப்பட்டதாக நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நீதிமன்றம் மூலமாக அளந்து

பார்த்தால்தான் குறிப்பிட்ட நான்கெல்லைக்குள் சொத்து உள்ளதா என்று கண்டுபிடிக்க முடியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லாத காரணத்தால் நாங்கள் கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எங்களது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 16.58)**